# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ஒரு இளவரசன் மேய்ப்பனாகிறான்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: E. Frischbutter; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



ஒரு நாள், ஒரு எகிப்தியன் ஒரு
எபிரேய அடிமையை
அடிப்பதைப்
பார்த்தான்.

மோசே பார்வோனின் அரண்மனையில்
ஒரு இளவரசனாக வளர்க்கப்பட்டு,
பயிற்சி பெற்றிருந்தாலும்,
அவன் ஒரு
எபிரேயன்தான்.
அவன் எபிரேய
அடிமைக்கு
உதவி
செய்யவேண்டும்.



சுற்றுமுற்றும் பார்த்தபோது தன்னை ஒருவரும் பார்க்கவில்லை என்று அறிந்துகொண்டு, அந்த அடிமையின் எஜமானனை மோசே தாக்கினான், நடைபெற்ற சண்டையிலே, மோசே எகிப்தியனை கொன்றுபோட்டான், துரிதமாக அந்த சரீரத்தை புதைத்துவிட்டான்.



மறு நாள் இரண்டு எபிரேயர்கள் சண்டையிடுவதைப் பார்த்தான். அதை நிறுத்த முயற்சித்தான். ஒருவன் சொன்னான், "அந்த எகிப்தியனை கொன்றதுபோல் என்னையும் கொன்றுவிடுவாயோ?"



அதைக்கேட்டு மோசே பயந்தான். நேற்று என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரிந்திருந்தது. பார்வோனுக்கும் தெரிந்தது. மோசே தப்பிக்கவேண்டியதாயிற்று. மீதியான் என்ற தேசத்திற்கு அவன் சென்றான்.



அவன் ஒரு கிணற்றின் அருகே இளைப்பாறியபோது, மீதியான் தேசத்து ஆசாரியனுடைய ஏழு குமாரத்திகள் தங்களுடைய ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட நீண்டதொட்டியை நிரப்பினார்கள்.



மற்ற மேய்ப்பர்கள் அவர்களை துரத்திவிட முயற்சித்தார்கள்.
மோசே பாதுகாத்து, அந்த பெண்களுக்கு உதவி செய்தான்.



"நீங்கள்
சீக்கிரமாய் வீட்டுக்கு
வந்துவிட்டீர்களே!"
என்று அந்த
பெண்களின்
தகப்பன் ரெகுவேல்
சொன்னான்.



அந்தப் பெண்கள்
நடந்ததைச் சொன்னபோது,
அவன், "அந்த மனிதனை
அழைத்துக்கொண்டுவாருங்கள்",
என்று சொன்னான்.





யெத்ரோ என்ற
மறு பெயர்கொண்ட
ரெகுவேலினிடத்தில்
மோசே வாழ்ந்து
வந்தான். பின்பு,
ரெகுவேலின்
மூத்தகுமாரத்தியை
மோசே விவாகம்
பண்ணினான்.

எகிப்திலோ, பார்வோன் மரித்துபோனான். எபிரேயராகிய, தேவனுடைய ஜனங்கள் இன்னும் அடிமைகளாகவே இருந்தார்கள்.



தங்களுடைய உபத்திரங்களிலே எவ்வளவாய் கூக்கிரலிட்டார்கள்!

எவ்வளவாய் தேவனிடத்தில் உதவி கேட்டு விண்ணப்பம் செய்தார்கள்! தேவன் அவர்கள் விண்ணப்பத்தைக்கேட்டார்.



மோசே அறிந்திருக்கவில்லை, ஆனால் அடிமைதனத்திலிருந்த எபிரேயரை மீட்பதற்கு மோசேயை உபயோகப்படுத்த தேவன் திட்டமிட்டிருந்தார்.  மோசே எகிப்தை விட்டு வந்து நாற்பது வருடங்களாயிற்று.



ரெகுவேலுடைய மந்தைக்கு அவன் மேய்ப்பனாயிருந்தான். ஆனால் எகிப்திலிருக்கும் தன்னுடைய சொந்த ஜனங்கள் இல்லாதக் குறையை உணர்ந்தான்.



ஒரு நாள் முட்செடி பற்றி எரிவதை மோசே பார்த்தான். ஆனால் எரிந்த தீயினால் முட்செடி வெந்துபோகாமலிருந்தது. அது எப்படி என்று மோசே கண்டுபிடிக்க முயற்சித்தான்.



மோசே அதை நெருங்கிய போது, தேவன் முட்செடியிலிருந்து அவனைக்கூப்பிட்டார். "மோசே!" "இங்கே இருக்கிறேன்," என்றான் மோசே, "நீ கிட்டேவராதே," என்று தேவன் சொன்னார். "உன் பாதரட்சையை கழற்றிப்போடு, ஏனெனில் நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி."



"நான் உன்னை பார்வோனிடத்திற்கு அனுப்பி என் ஜனங்களை எகிப்திலிருந்து கொண்டு வருவேன்," என்றார் தேவன். ஆனால் மோசே அங்கே போவதற்கு பயப்பட்டான்.



பின்பு தேவன் மோசேக்கு தன்னுடைய வல்லமையைக் காண்பித்தார். அவர் மோசேயுடைய கோலை சர்ப்பமாக மாற்றினார்.



மோசே அந்த சர்ப்பத்தின் வாலைப் பிடித்தபோது மீண்டும் அது கோலாக மாறியது.  தேவன் இன்னுமொரு அடியாளத்தைக் கொடுத்தார்.



"உன்னுடைய கையை உன் மடியில் போடு," என்று கட்டளையிட்டார். மோசே அதேப்போல செய்தான். அவனுடைய கை வெண் குஷ்டம் பிடித்ததாய் காணப்பட்டது.



அவன் மறுபடியும் செய்தபோது, அவனுடைய கை குணமாயிற்று.



மோசே இன்னும் சாக்குபோக்கு சொன்னான். "எனக்கு நன்றாக பேசத்தெரியாது," என்று தேவனிடம் சொன்னான். தேவனுக்கு கோபம் வந்தது. "உன் சகோதரனாகிய ஆரோனை நான் உபயோகப்படுத்துகிறேன், பேச வேண்டிய வார்த்தைகளை அவனுடைய வாயில் போடு," என்று தேவன் சொன்னார்.



மோசே எத்திரோவிடம் போய், தன்னுடைய சாமான்களைக் கட்டிக்கொண்டு எகிப்திற்குச் சென்றான்.



ஆரோன் மோசேயை
மலைப்பகுதியிலே சந்திக்க
போகும்படி தேவன் வழி
நடத்தினார். எபிரேய ஜனங்களை
எகிப்திலிருந்து எப்படி விடுதலை
செய்யவேண்டுமென்று தேவன்
கொடுத்த திட்டத்தை
மோசே ஆரோனிடம்
கூறினான்.



இரண்டு பேருமாக சேர்ந்து,
அந்தச் செய்தியை எபிரேய
தலைவர்களுடன் பகிர்ந்து
கொண்டார்கள். அவன்
அவர்களுக்கு
அடையாளங்களை
காண்பித்தபோது,
தேவன் தங்களுக்கு
உதவி செய்வார்
என்று அறிந்து
கொண்டார்கள்.



எல்லோரும் சேர்ந்து, பணிந்து
ஆராதனை செய்தார்கள்.



தைரியமாக, மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் சென்றார்கள், "தேவன் சொல்லுகிறார், 'எங்கள் மக்கள் போகட்டும்’," என்று அவர்கள் சொன்னார்கள்.



"இஸ்ரவேலை நான் விடமாட்டேன்," என்று பார்வோன் பதிலளித்தான். அவன் தேவனுக்கு கீழ்ப்படிய மறுத்தான்.



பார்வோனுடைய மனதை மாற்ற தேவன்
தன்னுடைய பெரிய வல்லமையை
உபயோகப்படுத்த வேண்டியதாகும்.



ஒரு இளவரசன் மேய்ப்பனாகிறான்

# தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

யாத்திராகமம் 2-5

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16